13th March 1961]

SRI S. M. ANNAMALAI : சர்க்கார் பணத்தைக் கையாடிய தாக இப்பொழுது புகார் வந்திருக்கின்றனவே அப்படியானுல் ஏன் அவர்களை சஸ்பெண்ட் செய்யக்கூடாது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : யாரை சஸ்பெண்ட் செய்வது, இதற்கு தகுந்த காரணம் என்ன என்று சொல்வதற்கில்லை. The matter is under Police investigation.

MR. SPEAKER: கனம் மந்திரி அவர்கள் இப்பொழுது பதில் சொல்வது சரி அல்ல. இது இன்வெஸ்டிகேஷனில் இருக்கும் போது அதைப்பற்றி கேட்பதும் சரி அல்ல. This will prejudice the investigation.

Selection posts (P.W.D.)

* 794 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number of officers selected for the selection posts in the Public Works Department every year for the last five years and the posts to which they were selected;

(*b*) the principle followed in the selection and the body which selects them; and

(*c*) how far their academic qualifications and rank in examinations are taken into consideration in the matter of selection?

THE HON. SRI P. KAKKAN : (*a*) *to* (*c*) The particulars [a] are placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : இப்பொழுது சூபரின்டன்ட்டிங் என்ஜினீயரை தேர்ந்தெடுத்ததில், நேரடியாக அசிஸ்டன்ட் என்ஜினீயராக நியமிக்கப்பட்டு அந்த தேதியில் இருந்து சர்விசைக் கணக்கிட்டுப்பார்த்து ஒரு ஹரிஜன் மாத்திரம் எக்ஸிகூடிவ் என்ஜினியராக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கு எடுத்தது உண்மையா ? அப்படியாயின் அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : எக்ஸிகூடிவ் என்ஜினீயர் ஆன பிறகுதான் சூபரின்டன்டிங் என்ஜினீயராக முடியும். எக்ஸ்கூடிவ் என்ஜினீயருக்கு மேல்தான் சூபரின்டன்டிங் என்ஜினீயர்.

SRI V. K. KOTHANDARAMAN: மற்றவர்கள் விஷயம் போல் அல்லாமல் இது மாத்திரம் ஏன் இப்படி செய்யப்பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினருக்கு நான் சொல்லவிரும்புவது நான் வந்த பிறகு எந்தவிதமான முடிவும் ஏற்படவில்லை என்று.

---

[a] Printed as Appendix VI on pages 334–335 infra.